த.வெ.க. ஆட்சியில் குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்த விவகாரம்

கூட்டணிக் கட்சிகள் கள்ள மௌனம் சாதிப்பது ஏன்?

தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

சென்னை, நவ. 14-

த.வெ.க. ஆட்சியில் 6 மாதங்களில் 3 முறை குடிநீர் தொட்டியில் மலம் கலந்த போதும் கூட்டணி கட்சிகளும் நடுநிலையோக்கியர்களும் கள்ள மௌனம் சாதிப்பது ஏன் என்று தி.மு.கழக ஐ.டி.விங் கேள்வி எழுப்பியுள்ளது.

தி.மு.க ஐ.டி.விங் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

6 மாத த.வெ.க. ஆட்சியில 3வது முறை குடிநீர் தொட்டியில மனிதக்கழிவு! வாய் மூடி மௌனமாக வேடிக்கை பார்க்கும் கூட்டணிக் கட்சிகளும் 'நடுநிலை' யோக்கியர்களும்!

இதுவே வேறு ஆட்சியாக இருந்திருந்தால், இந்நேரம் சமூக நீதி, மனித உரிமை எனப் பேசும் நாடகம் போடும் கட்சிகளும் ஆளுங்களும் இந்நேரம் பொங்கியிருப்பார்கள்!



ஆனால் இப்போது த.வெ.க. கூட்டணியில் ஒட்டிக்கொண்டு இருக்கும் ஒரே காரணத்துக்காக, மக்கள் குடிக்கும் தண்ணீரில் மனிதக்கழிவு கலக்கும் அநியாயத்தைக் கூடத் தட்டிக்கேட்க வக்கில்லாமல் வாய் மூடிக் கிடக்கிறீர்களே, இதுதான் உங்கள் கொள்கையா?

நாங்கள் நடுநிலைவாதிகள், தப்பு நடந்தால் யாராக இருந்தாலும் கேள்வி கேட்போம் என்று சீன் போட்டவர்கள் எல்லாம் இப்போது எந்தப் பொந்துக்குள் போய் ஒளிந்துகொண்டீர்கள்? தி.மு.க. ஆட்சியில் சின்ன விஷயம் நடந்தாலும் "தமிழ்நாடே அழிந்து போச்சு" என ஒப்பாரி வைத்த மீடியாவும், நடுநிலை கும்பலும், த.வெ.க. ஆட்சியில் 6 மாதத்தில் 3 தடவை குடிநீர் தொட்டியில் மலம் கலந்தபோது கூட கள்ள மௌனம் சாதிப்பது ஏன்?

இவ்வாறு தி.மு.கழக ஐ.டி.விங் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெரம்பலூர் கழக போட்டோகிராபர் அப்துல்லா மகன் அ. அப்துல்கலாம் ஷபானா திருமணம் அண்மையில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ. இராசா. எம். பி. அவரது இல்லம் சென்று மணமக்களை வாழ்த்தினார். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப. பரமேஷ் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என் .ராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். இராஜ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சேலம் மத்திய மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

இரா. இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், நவ. 14-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா. இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் 17.11.2026ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்டக்கழக அலுவலகம் "கலைஞர் மாளிகை"யில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ஜி.கே.சுபாசு



தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத் தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக செயலாளர்கள், பகுதிகழக செயலாளர்கள், பேரூர்கழக செயலாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், மாநகரத்தில் உள்ள வட்டக் கழக செயலாளர்கள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகரக் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்த நாள் விழா.

2. வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வடுவூர் தென்பாதி ஊராட்சி, புதுக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த நவநீதகிருஷ்ணன், வடுவூர் வடபாதி ஊராட்சியைச் சேர்ந்த அபினேஷ் மற்றும் புள்ளவராயன்குடிகாடு ஊராட்சியைச் சேர்ந்த வானவன் ஆகியோர் பீகார்பாட்னாவில் நடைபெற்ற 52வது தேசிய ஜூனியர் கபடி சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாடு அணியின் சார்பில் பங்கேற்று வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்ததைப் பாராட்டி நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, கபடி வீரர்களை நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

காவல்துறை எதற்கு?

இனி பொதுமக்களே போலீஸ் வேலையைப் பார்க்கணுமா?

தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

சென்னை, நவ.14-

தி.மு.க. ஐ.டி.விங் எழுப்பியுள்ள கேள்வி வருமாறு:

என்னது... தமிழ்நாட்டில் இனி பொதுமக்களே போலீஸ் வேலையையும் பார்க்கணுமா?

சந்தேகப்படும் வாகனங்களை மக்களே கண்காணிக்கணும்! அந்நியர்களை மக்களே கவனிக்கணும்! வீட்டுக்கு மக்களே CCTV மாட்டணும்! நகைகளை மக்களே பாதுகாக்கணும்!

திருவாரூர் காவல்துறையின் அறிவுரைகளைப் பார்த்தால், அடுத்து "திருடனைப் பிடித்தால் மக்களே பத்திரமாக ஸ்டேஷனில் ஒப்படைக்கவும். முடிந்தால் FIR-ஐயும் நீங்களே எழுதிக்கொண்டு வரவும்!" என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

முதலமைச்சரே, மக்கள் தங்கள் வீட்டையும் பார்த்துக்கொண்டு, போலீஸ் வேலையையும் செய்ய வேண்டுமென்றால்...

காவல்துறை எதற்கு? காவல்துறையைக் காவல் காக்கவா?

விழிப்புணர்வு அவசியம் தான்! ஆனால் மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குத்தானே?

போலீஸ் துறைக்கு பொறுப்பு வகிப்பவருக்கு வேறு என்ன பெரிய வேலை?

இது தமிழ்நாடா? இல்லை ஒவ்வொரு வீடும் தனிக் காவல் நிலையமாக மாற வேண்டிய போர்க்களமா?

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

29 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணாவின்
பெருமைமிகு மாணவன்...
முத்தமிழறிஞர் கலைஞரின்
விசுவாசமிகு தம்பி...
கழகத்தலைவர் தளபதியின்
பாசமிகு தமையன்...
நீங்கள் திராவிடம் செதுக்கிய கல்வெட்டு;
பாச நினைவோடு வாழ்கிறோம் – உமை விட்டு!

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்
டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு
M.B.B.S., M.S. (OBST. & GYNAC.)
முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்,
மாநில மருத்துவ அணித் தலைவர்,
செய்தித் தொடர்பாளர், தி.மு.க.



தோற்றம்: 11-05-1937 மறைவு: 14-11-1997

திரு. என்.வி.என். சோமு
முன்னாள் அமைப்புச் செயலாளர், தி.மு.க.,
முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர்